# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் II பரீட்சை – 2023 சனவரி

## (204) வணிக முகாமைத்துவம்

இவ்வினாத்தாள் **A, B, C** என 3 பகுதிகளையும் 07 வினாக்களையும் கொண்டுள்ளது.

## <u>பகுதி A</u>

### வினா இல. 01

வினா 01 ஆனது பதினைந்து (15) நோக்கச் சோதனை வினாக்களை கொண்டது. மொத்தம் 25 புள்ளிகளை கொண்ட இவ்வினாவானது வணிக முகாமைத்துவத்தின் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கியது.

இல **1.1** தொடக்கம் **1.5** வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடையை தெரிவு செய்துள்ளதுடன் சில பரீட்சார்த்திகள் இவ்வினாவை சரியாக புரிந்துக் கொள்ளாமையின் காரணமாக குறைந்த புள்ளிகளை பெற்றுள்ளனர்.

**1.6** தொடக்கம் **1.10** வரையான வினாக்களுள் தரப்பட்டுள்ள இரண்டு வினாக்களில் ஒன்றினை தெரிவு செய்து விடைப்புத்தகங்களில் எழுத வேண்டும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடையினை எழுதியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் அறிவுறுத்தலை சரியாகப் புரிந்துக் கொள்ளாமல் இலக்கம் **1.2** என எழுதியிருந்தனர்.

இல **1.11** தொடக்கம் **1.15** வரையான வினாக்களுக்கான விடைகளை பரீட்சார்த்திகளின் விடைப் புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதற்கு எதிரே குறுகிய விடையாக எழுத வேண்டும்.

**1.11** நிறுவனங்களுக்கான பண்டக் குறியிடலின் (Branding) முக்கியத்துவத்திற்கான இரண்டு காரணங்கள் பரீட்சார்த்திகளிடம் வேண்டப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் இரண்டு புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளலாம். சில பரீட்சார்த்திகள் இரண்டு சரியான காரணங்களை தெரிவித்து முழுப் புள்ளிகளை பெற்றுள்ளனர். சில பரீட்சார்த்திகள் பொருத்தமற்ற நீளமான விடைகளை தந்து முழுமையான புள்ளிகளை பெறத் தவறினர்.

**1.12** நிறுவனமொன்றிலுள்ள ஊழியர்கள் ஊக்கமிழந்துள்ளனர் என்பதை வெளிப்படுத்தும் இரண்டு சமிஞ்ஞைகளை குறிப்பிடுமாறு பரீட்சார்த்திகளிடம் வேண்டப்பட்டுள்ளது. சில பரீட்சார்த்திகள் இரண்டு சரியான காரணங்களை தெரிவித்து முழுப் புள்ளிகளை பெற்றுள்ளனர். மேலும் சில பரீட்சார்த்திகள் ஊக்கப்படுத்தப்பட்ட ஊழியர்களின் பண்புகளை உதாரணமாக எழுதியுள்ளனர். எனினும் வினாவில் ஊக்கப்படுத்தப்படாத ஊழியர்கள் எனும் சொல் தரப்பட்டுள்ளது. பெரும்பாலும் பொருத்தமான விடை தரப்பட்டுள்ளது.

1.13 நிறுவனங்கள் ஊழியர்களை வெளிவாரியாக ஆட்சேர்ப்புச் செய்வதைக் காட்டிலும் உள்ளக ரீதியாக ஆட்சேர்ப்புச் செய்வதன் மீது கவனம் செலுத்த வேண்டும் என்பதற்கான இரண்டு (02) காரணங்களைக் குறிப்பிடுமாறு பரீட்சார்த்திகளிடம் வேண்டப்பட்டுள்ளதுடன் பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடையை தந்துள்ளனர். சில பரீட்சார்த்திகள் பொருத்தமற்ற நீளமான விடைகளை தந்து முழுமையான புள்ளிகளை பெறத் தவறினர்.

1.14 பயனுறுதிமிக்க துண்டமாக்கலுக்கான இரண்டு (02) தேவைப்பாடுகளைக் குறிப்பிடுமாறு பரீட்சார்த்திகளிடம் வேண்டப்பட்டுள்ளது. இவ்வினாவின் செயற்றிறன் மட்டம் மிகவும் குறைந்த அளவில் காணப்பட்டது. இதற்கு பாடத்தில் கொண்டுள்ள குறைந்த அறிவு மட்டம் மற்றும் பாடத்தினை முறையாகக் படிக்காமையே காரணமாகும்.

1.15 வியாபாரச் செயன்முறை மீள்-பொறியியலாக்கலின் இரண்டு (02) பிரதான பண்புகளை (Key Characteristics) குறிப்பிடுமாறு பரீட்சார்த்திகளிடம் வேண்டப்பட்டுள்ளது. இவ்வினாவின் சயற்றிறன் மட்டம் மிகவும் குறைந்த அளவில் காணப்பட்டது. சில பரீட்சார்த்திகள் மட்டும் சரியான விடையை வழங்கி இரண்டு புள்ளிகளை பெற்றுக் கொண்டுள்ளனர்.

## <u>பகுதி B</u>

### வினா இல 02

இப்பகுதியானது 05 கட்டாய வினாக்களைக் கொண்ட பகுதியாகும். ஒரு வினாவிற்கு 10 புள்ளிகள் வீதம் மொத்தம் 50 புள்ளிகள் வழங்கப்படும். பெரும்பாலான பரீட்சார்த்திகளால் வழங்கப்பட்ட விடைகள் திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது. சில பரீட்சார்த்திகள் சரியாக விடையளிக்க தவறியுள்ளதுடன் மேலும் சில பரீட்சார்த்திகள் பொருத்தமற்ற விடைகளை தந்தமை தெளிவாகப் புலனாகிறது.

வினா 02 ஆனது **a, b, c** ஆகிய மூன்று வினாக்களை கொண்டது.

**(a)** நவீன வியாபார உலகில் தகவல் தொழினுட்பம் எவ்வாறு சவால் மிகுந்ததாக மாறி வருகிறது என்பதை விபரிக்குமாறு பரீட்சார்த்திகளிடம் வேண்டப்பட்டுள்ளது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் தகவல் தொழில்நுட்பத்தின் அனுகூலங்களை எழுதியிருந்தனரே தவிர சவால்களை எழுதவில்லை. இவ்வினாவின் செயற்றிறன் மட்டம் குறைந்த அளவில் காணப்பட்டது.

**(b)** விஞ்ஞான முகாமைத்துவக் கோட்பாட்டின் இரண்டு (02) கோட்பாடுகளை (Principles) இனங்காணுமாறு பரீட்சார்த்திகளிடம் வேண்டப்பட்டுள்ளது. தற்போதைய நவீன மாற்றமடைகின்ற வணிக சூழலில் முகாமையாளர்கள் எவ்வாறு முன்ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென வினாவானது வலியுறுத்துகின்றது. இவ்வினாவின் செயற்றிறன் மட்டம் குறைந்த அளவில் காணப்பட்டதுடன் பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு முன் இப்பகுதியை சிறப்பாக படிக்கவில்லை என்பது தெளிவாக தெரிகின்றது.

**(c)** ஒரு தந்திரோபாயத்தின் இரண்டு (02) வகிபாகங்களை (Roles) விபரிக்குமாறு பரீட்சார்த்திகளிடம் வேண்டப்பட்டுள்ளது. இவ்வினாவின் பரீட்சார்த்திகளின் செயற்றிறன் மட்டம் மிகக் குறைந்த அளவில் காணப்பட்டது. தகவல் தொழில்நுட்ப சவால் பகுதியில், தகவல் தொடர்பாடல் உபாயங்களை பின்பற்றி நிறுவனமொன்றை கொண்டு நடத்துவதற்கான முகாமை பொறுப்புக்கள் பற்றி விடையளிக்காது தகவல் தொழில்நுட்ப முக்கியத்துவத்தினை பற்றியே பரீட்சார்த்திகள் விடையளித்துள்ளனர்.

**வினா இல 03**

இவ்வினாவானது வணிகத்திட்டமிடல் மற்றும் தீர்மானமெடுத்தல் என்ற பகுதியினை கருத்திற் கொண்டுள்ளதுடன் இலகுவாக 10 புள்ளிகளை பெற்றுக்கொள்ளவும் முடியும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்து முழுப் புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர்.

**பகுதி (A)** ஆனது புத்திசாதுரியமான தீர்மானமெடுத்தல் செயன்முறையின் படிநிலைகளைக் (Steps) குறிப்பிடுமாறு பரீட்சார்த்திகளிடம் வேண்டப்பட்டுள்ளது. இவ்வினாவின் செயற்றிறன் மட்டம் உயரிய அளவில் காணப்பட்டது.

**பகுதி (B)** ஆனது வணிக நிறுவனமொன்றின் இரண்டு (02) வகையான திட்டங்களை (Plans) விபரிக்குமாறு பரீட்சார்த்திகளிடம் வேண்டப்பட்டுள்ளது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் உபாய திட்டம். செயன்முறை திட்டம், செயற்பாட்டு திட்டங்களை வழங்கியிருந்தனர். எனவே இப்பகுதியில் பரீட்சார்த்திகள் உயர்ந்த மட்டத்திலான அறிவினை கொண்டிருந்தார்கள் என்பது புலனாகின்றது.

**பகுதி (C)** இற்கான விடையானது ஏனைய இரண்டு பகுதிகளுடன் ஒப்பிடும் பொழுது குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வளங்கள் மற்றும் போதுமான தொடர்பாடல் இன்மையால் தமது விடைகளை இரண்டுக்கு மட்டுப்படுத்தியுள்ளதுடன் இவ்வினாவின் செயற்றிறன் ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

**வினா இல 04**

நிறுவனங்களின் கட்டமைப்பு மற்றும் அதன் தந்திரோபாயங்கள் பற்றி மீளவும் சிந்திப்பதற்கும் அவற்றை மீள் வடிவமைப்புச் செய்வதற்கும் வழியமைப்பதற்குமாக மூன்று பகுதிகளைக் கொண்ட வினாக்கள் மூலம் பரீட்சார்த்திகள் பரீட்சிக்கப்பட்டனர்.

**பகுதி (A)** ஆனது ஒரு நிறுவனத்தின் தொழிற்பாட்டுக் கட்டமைப்பின் இரண்டு (02) பின்னடைவுகளைக் (Drawbacks) குறிப்பிடுமாறு பரீட்சார்த்திகளிடம் வேண்டப்பட்டுள்ளதுடன் இவ்வினாவின் செயற்றிறன் மட்டம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

மேலும் **பகுதி (B)** ஆனது நிறுவனக் கட்டமைப்புக்கும் தந்திரோபாயத்திற்குமிடையிலான தொடர்பினை விபரிக்குமாறு பரீட்சார்த்திகளிடம் வேண்டப்பட்டுள்ளது. இவ்வினாவின் செயற்றிறன் மட்டம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் சில பரீட்சார்த்திகள் இவ்வினாவை சரியாகப் புரிந்துக்கொள்ளவில்லை என்பது புலனாகின்றது.

**பகுதி (C)** இலங்கையின் தற்காலச் சூழலில் தொழிற்பாட்டு முகாமைத்துவத்தின் இரண்டு (02) வகிபாகங்களை விபரிக்குமாறு பரீட்சார்த்திகளிடம் வேண்டப்பட்டுள்ளது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் எரிபொருள் பிரச்சினை தொடர்பான விடையினை வழங்கியிருந்தனர் சில பரீட்சார்த்திகள் இவ்வினாவின் உள்ளடக்கத்தை புரிந்துக் கொள்ளாமல் விடை தரப்படாமையினால் அதை பொருத்தமான விடையாக ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்வினாவின் செயற்றிறன் மட்டம் சராசரி மட்டத்தில் காணப்பட்டது.

**வினா இல 05**

இவ்வினாவானது பயனுறுதி மிக்க தொடர்பால் மற்றும் கட்டுப்படுத்துதல் தொடர்பான அறிவினை பரீட்சிப்பதற்காக முன்வைக்கப்பட்டது. இவ்வினாவானது பகுதி A, B ஐக் கொண்டதுடன் 10 புள்ளிகளையும் கொண்டுள்ளது.

**பகுதி (A)** ஆனது நிறுவனமொன்றிற்கு பயனுறுதிமிக்க தொடர்பாடல் ஏன் முக்கியமானது என்பதற்கான மூன்று (03) காரணங்களை விபரிக்குமாறு பரீட்சார்த்திகளிடம் வேண்டப்பட்டுள்ளது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் 05 அல்லது 06 புள்ளிகளை வினாவின் பெற்றுள்ளனர். சில பரீட்சார்த்திகள் சுருக்கமாக விடையளிக்க வேண்டிய விடைகளை மிக விபரமாகவும் நீளமாகவும் விடையளித்திருந்தனர். எனினும் மூன்று காரணங்களை சுருக்கமாக வழங்கி புள்ளிகளைப் பெறலாம். சில பரீட்சார்த்திகள் நீளமான விடைகளை பந்திகளாக வழங்கினர். இப்பகுதி தொடர்பாக பரீட்சார்த்திகள் முழுமையான அறிவினை கொண்டுள்ள போதும் பொருத்தமாக விடையளிக்கும் முறையில் குறைபாடுகள் காணப்படுவதாக உணர முடிகிறது. இவ்வினாவின் செயற்றிறன் மட்டம் திருப்திகரமாக காணப்பட்டது.

மேலும் **பகுதி (B)** ஆனது கட்டுப்படுத்தலின் இரண்டு (02) பண்புகளை (Characteristics) விபரிக்குமாறு பரீட்சார்த்திகளிடம் வேண்டப்பட்டுள்ளது. இவ்வினாவின் செயற்றிறன் மட்டம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் கட்டுப்படுத்தலின் முக்கியத்துவத்தை எழுதியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் இவ் வினாவை சரியாகப் புரிந்துக் கொள்ளவில்லை அல்லது இப்பகுதியினை முறையாக படிக்கவில்லை என்பதாகும். சில பரீட்சார்த்திகள் மாத்திரம் இப்பகுதிக்கு சரியான விடையை எழுதியிருந்தனர்.

### வினா இல 06

இவ்வினாவானது உற்பத்தி செயன்முறையில் செயற்பாட்டு முகாமைத்துவத்தின் அறிவினை பரீட்சிப்பது தொடர்பானதாகும் இவ்வினா மூன்று பகுதிகளைக் கொண்டது.

**பகுதி (A)** நிறுவனமொன்றின் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் இரண்டு (02) வழிமுறைகளை விபரிக்குமாறு பரீட்சார்த்திகளிடம் வேண்டப்பட்டுள்ளது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் உற்பத்தி திறனை அதிகரிப்பது தொடர்பான சரியான விடைகளை வழங்கி பெரும்பாலான புள்ளிகளைப் பெற்றுள்ளனர். சில பரீட்சார்த்திகள் பொது அறிவினை பயன்படுத்தாமல் பிழையான விடையினை வழங்கியிருந்தனர். சில பரீட்சார்த்திகளின் விடை பொறுந்தியிருக்கவில்லை. இவ்வினாவின் செயற்றிறன் மட்டம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

சில பரீட்சார்த்திகள் மாத்திரம் **பகுதி (B)** இற்கான சரியான விடையை வழங்கியிருந்தனர். உற்பத்தி செயன்முறையின் வழங்கல் சங்கிலியை புரிந்துக்கொண்டது தொடர்பான மிகக் குறைந்த அறிவு மட்டமே காரணமாகும்.

**பகுதி (B II)** சில பரீட்சார்த்திகள் மட்டும் சரியான விடையை வழங்கியிருந்தனர். தர முகாமைத்துவத்தில் குறைந்தளவிலான சரியான விடைகளை வழங்கப்பட்டிருந்தன.

**பகுதி (C)** ஆனது தொழிற்பாட்டு முகாமைத்துவத்தில் கேள்வியை எதிர்வுகூறுவதன் (Demand forecasting) இரண்டு (02) முக்கியத்துவத்தை இனங்காணுமாறு பரீட்சார்த்திகளிடம் வேண்டப்பட்டுள்ளது. குறிப்பிடத்தக்க பரீட்சார்த்திகள் சரியான விடையை வழங்கி இரண்டு புள்ளிகளைப் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் மிகக் குறைந்த வினைத்திறன் மட்டத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

பொதுவாக பார்க்கும் போது பகுதி (B) யில் தரப்பட்ட விடைகள் திருப்திகர மட்டத்தில் காணப்பட்டதுடன் இவ்வினாவின் செயற்றிறன் மட்டம் சராசரி மட்டத்தில் காணப்பட்டது.

## பகுதி C

**வினா இல 07**

இது 25 புள்ளிகளை கொண்ட சம்பவகற்கை தொடர்பான வினாவாகும். இவ் வினாவானது அடிப்படை விடயங்கள் தொடர்பாக பரீட்சார்த்திகளின் அறிவினை சோதனை செய்வதற்காக இது A, B, C, D மற்றும் E எனும் 05 பிரிவுகளைக் கொண்டது.

**பகுதி (A)** ஆனது டிலந்தவின் வியாபாரம் சர்வதேச அளவில் வளர்ச்சியடைவதற்கு பயனுறுதிமிக்க சந்தைப்படுத்தல் எவ்வாறு உதவும் என்பதற்கான மூன்று (03) வழிமுறைகளை விபரிக்குமாறு பரீட்சார்த்திகளிடம் வேண்டப்பட்டுள்ளது. விடைகளை பரீட்சிக்கும் போது சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் தொடர்பாக பரீட்சார்த்திகளின் அறிவு மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. சில பரீட்சார்த்திகள் மாத்திரம் இவ்வினாவை சரியாகப் புரிந்துக்கொண்டு விடையளித்துள்ளனர்.

மேலும் **பகுதி (B)** ஆனது தந்திரோபாயமொன்றை விருத்தி செய்யும்போது, SWOT பகுப்பாய்வைப் பயன்படுத்தி டிலந்த எவ்வாறு சூழல் பகுப்பாய்வை கவனத்திற் கொள்ளலாம் என்பதை விபரிக்குமாறு பரீட்சார்த்திகளிடம் வேண்டப்பட்டுள்ளது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சம்பவத்தை நன்றாகப் புரிந்து விளக்கமான விடையினை தந்திருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் 06 புள்ளிகளைப் பெற்றிருந்தனர். ஒட்டுமொத்தமாக இவ்வினாவிற்கான செயற்றிறன் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் சில பரீட்சார்த்திகள் சிறப்பாக செயற்படவில்லை.

**பகுதி (C)** மனித வள திட்டமிடல் செயன்முறையின் வெற்றிக்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை இனங்காணுமாறு பரீட்சார்த்திகளிடம் வேண்டப்பட்டுள்ளது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சிறப்பாக விடையளிக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் இவ்வினாவை சரியாகப் புரிந்துக் கொள்ளவில்லை. இவ்வினாவிற்கான செயற்றிறன் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

**பகுதி (D)** ஒரு பொருத்தமான வெகுமதி முகாமைத்துவ முறைமையின் மூன்று (03) நோக்கங்களைக் குறிப்பிடுமாறு பரீட்சார்த்திகளிடம் வேண்டப்பட்டுள்ளது. குறிப்பிடத்தக்க பரீட்சார்த்திகள் இவ்வினாவிற்கு விடையளிப்பதை தவிர்த்திருந்தனர். இது முகாமைத்துவம் தொடர்பான குறைந்த அறிவு மட்டம் அல்லது கல்வி நிறுவனங்களின் குறைந்த தயார்படுத்தல் ஆகும். அல்லது புரிந்துக் கொள்ளுதல் பிரச்சினையாகும். சில பரீட்சார்த்திகள் இவ் வினாவினை சரியாகப் புரிந்துக் கொள்ளவில்லை. இவ்வினாவிற்கான செயற்றிறன் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

**பகுதி (E)** மாற்றத்தைத் தழுவி ஏற்றுக்கொள்ள ஊழியர்களை ஊக்குவிப்பதற்கு டிலந்த பயன்படுத்தக்கூடிய மூன்று (03) வழிமுறைகளை (Ways) விபரிக்குமாறு பரீட்சார்த்திகளிடம் வேண்டப்பட்டுள்ளது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சராசரி மட்டத்தில் விடையிளித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் மாத்திரம் முறையாக விடையளித்து ஒதுக்கிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்டனர். சில பரீட்சார்த்திகள் வினாவை சரியாகப் புரிந்துக் கொள்ளவில்லை. சில பரீட்சார்த்திகள் பொருத்தமற்ற விடையினை தந்துள்ளதுடன் இவ்வினாவிற்கான செயற்றிறன் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. ஒட்டுமொத்தமாக வினா 07 இற்கான செயற்றிறன் சராசரி மட்டமாகும்.

------

**பரீட்சார்த்திகளின் புரிதல் மற்றும் ஆற்றல் மட்டத்தை மேம்படுத்தும் பொருட்டு கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பொதுவான விடயங்கள்:**

**(1)** பாடத்திட்டத்தை / பாடப்புத்தகத்தை நன்றாகக் கற்கவும்.

**(2)** வினாத்தாளைப் பெற்றதும் அதிலுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்கவும் (இந்த நோக்கத்திற்காக மேலதிக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது).

**(3)** பரீட்சார்த்திகள் வினாவைப் பல தடவைகள் வாசித்து அதில் என்ன கேட்கப்பட்டுள்ளது என்பதை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். நேரடியான விடையொன்று எதிர்பார்க்கப்படும் போது தேவையற்ற விவரிப்புகளையும் விபரங்களையும் எழுதுவதைத் தவிர்க்கவும்.

**(4)** விடைகள் ஒரே மொழியில் மாத்திரம் எழுதப்பட வேண்டும். அது நீங்கள் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது குறிப்பிட்ட மொழியாக இருப்பதுடன் ஒவ்வொரு வினாவுக்குமான விடைகள் ஒரு புதிய பக்கத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

**(5)** பரீட்சையின்போது நேரத்தை வினைத்திறனான முறையில் பயன்படுத்தவும்.

**(6)** விடைப்புத்தகத்தைக் கையளிப்பதற்கு முன்னர், சகல வினா இலக்கங்களும் உங்களுடைய சுட்டெண்ணும் சரியாக எழுதப்பட்டிருக்கிறதா என்பதை இருமுறை பரீட்சித்துக் கொள்ளவும்.

**(7)** ''செயல் வினைச்சொல் செவ்வை நிரல்'' வினாத்தாளின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒவ்வொரு வினைச் சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் அந்த நிரலில் தரப்பட்ட வரைவிலக்கணங் களின் அடிப்படையில் விடையளித்தல் வேண்டும்.

**(8)** கையெழுத்து தெளிவாக இருப்பதையும் விடைகளுக்கான வினா இலக்கங்கள் சரியாக எழுதப்பட்டுள்ளன என்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

**(9)** ஏஏரீ இனால் வெளியிடப்பட்ட சுய கற்றல் புத்தகம், கட்டுரைகள் மற்றும் சஞ்சிகைகளை வாசிப்பது பயனுடையதாகும்.

**(10)** உங்களது அறிவை மேம்படுத்திக்கொள்ளும் பொருட்டு கடந்தகால வினாத்தாள்கள் மற்றும் முன்னோடிப வினாத்தாள்களுக்கு விடையெழுதிப் பயிற்சி பெறுவது சிறந்தது.

**(11)** பரீட்சையில் சித்தியடையும் உறுதியான நோக்கத்துடனும் நல்ல தயார்படுத்தலுடனும் பரீட்சைக்கு முகங்கொடுக்கவும்.

-***-